செங்கல்பட்டு சட்டமன்ற தொகுதி, காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட நெடுங்குன்றம் ஊராட்சியில் “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையை விரைந்து முடித்திட மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைகளை வழங்கினார். அருகில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.டி.லோகநாதன், ஒன்றியக்குழு தலைவர் உதயா கருணாகரன், துணைத் தலைவர் ஏ.வி.எம். இளங்கோவன், பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் உள்ளனர்.

எதிர்க்கட்சி தலைவரின் நாக்கும் நாடகம் போடுகிறது!

தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிக்கை

சென்னை, ஜூலை 31-

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியின் நாக்கும் நாடகம் போடுகிறது என்று தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து டி.ஆர்.பி. ராஜா அறிக்கை வருமாறு:-

ஒரு சில நாட்களுக்கு முன்பு “முதலமைச்சர் அவர்கள் பூரண நலம் பெற வேண்டும்” என “சுந்தரா டிராவல்ஸ்” யாத்திரையில் சொன்ன அதே எதிர்க்கட்சி தலைவரின் நாக்குதான் இப்போது ‘ஆஸ்பத்திரியில் டேபிள் மீட்டிங்’ என நர்த்தனம் ஆடுகிறது. அது சரி பொதுவாக எல்லோரும் டேபிள் முன்பு அமர்ந்துதான் மீட்டிங் போடுவார்கள் என்பது தெரியாமல்தானே பழனிச்சாமி பாவம் டேபிளுக்கு அடியில் மீட்டிங் போட்டார் !

அரசு அலுவல்கள் அனைத்தும் தடையின்றி நடைபெறுகிறதா என அதிகாரிகளை அழைத்து ஆய்வு செய்வது, “உங்களுடன் ஸ்டாலின்” எனும் மகத்தான திட்டத்திற்கான முகாம்கள் திட்டமிட்டபடி நடைபெறுகிறதா என தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளிடம் விவரங்கள் கேட்பது, காணொளிக் காட்சி வாயிலாக கலெக்டர்களுடன் ஆலோசனை நடத்துவது. பொதுமக்களுடன் வீடியோ காலில் பேசி முகாமின் செயல்பாடுகள் திட்ட மிட்ட படி மக்களுக்கு சென்றடைகின்றனவா என்று நேரடியாக பயனாளிகளிடம் கேட்டறிதல், பிரதமர் மோடியின் தமிழ் நாட்டுப் பயணத்தின் போது மாநிலத்தின் வளர்ச்சிக்காக நாம் பெற வேண்டிய திட்டங்களுக்காக கடிதம் தயார் செய்து அனுப்பி வைத்தது என மருத்துவர்களின் அறிவுறுத்தலின்படி சில நாட்கள் மருத்துவமனையில் இருந்த போதும் தொடர்ந்து தடையின்றி தனது மக்கள் பணியை செய்தார் திராவிட நாயகன் நமது முதலமைச்சர் அவர்கள்!

ஸ்டெர்லைட்டுக்கு எதிராகப் போராடியவர்கள் மீது துள்ளத் துடிக்கத் துப்பாக்கிச் சூடு நடத்தி 13 பேரைப் பலி வாங்கிவிட்டு, “டிவியில் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன்” எனச் சொன்னவர் தான் இந்த எதிர்க்கட்சித் தலைவர்.

எந்த காலத்திலும் உருப்படியாக முதலமைச்சர் பணிகளையே செய்யாத எதிர்க்கட்சித் தலைவருக்கு இவையெல்லாம் ஆச்சரியமாகத் தான் இருக்கும். “அம்மா இட்லி சாப்பிட்டார்; செவிலியர்களுடன் பந்து விளையாடினார்; விரைவில் வீடு திரும்புவார்; டிவி பார்த்தார்; கிச்சடி சாப்பிட்டார்; நர்ஸ்களுக்குப் பரிசு கொடுத்தார்; டாக்டர்களுக்கே அறிவுரை கூறினார்” என்றெல்லாம் திரைக்கதை எழுதி நாடகம் போட்டவர்களே உங்கள் தரம் தாழ்ந்த எண்ணங்களை உலகிற்கு பறைசாற்றாதீர்கள் !

அம்மையார் ஜெயலலிதா அவர்கள் இருக்கும் வரை ஒன்றிய அரசின் ‘உதய் மின் திட்டத்தில்’ அவர் கையெழுத்து போடவில்லை. அவர் மறைந்த பிறகு ஓடோடிப்போய் கையெழுத்து போட்டு தமிழ் நாட்டை வஞ்சித்தது சந்துகளில் இருந்து குரல் கொடுக்கும் ஷாக்ஷாத் திரு. பழனிசாமிதான் என்பது ஊருக்கே தெரிந்தபோதும் இன்று அவரே “மின்கட்டணம் உயர்ந்து விட்டது” என நீலிக் கண்ணீர் வடித்திருக்கிறார்.

இப்படி, தானே ஏற்றிய மின்கட்டண உயர்வைக் குறித்து தானே பேசிவரும் பழனிசாமி, ஒன்றிய அரசின் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை குறித்து ஏன் பேச அஞ்சுகிறார்? 2014ம் ஆண்டு ரூ.414ஆக இருந்த சமையல் காஸ் சிலிண்டர் விலை தற்போது ரூ.868.50ஆக உயர்ந்து வளர்ந்து நிற்பது எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாதா? அல்லது எப்போதும் போல நடிக்கிறாரா ?

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

வாட்ஸ் அப்பில் வலம் வருவது!



சென்னை பறக்கும் ரயில் நிறுவனம் (MRTS)

சென்னை மெட்ரோவுடன் இணைப்பு எப்போது?

மக்களவையில் – கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 31-

சென்னை பறக்கும் ரயில் நிறுவனத்தை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கையகப்படுத்துவது குறித்த கேள்விகளை திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. மக்களவையில் எழுப்பினார்.

சென்னை மாஸ் ரேபிட் டிரான்சிட் சிஸ்டம் (MRTS) எனப்படும் சென்னை பறக்கும் ரயில் திட்டத்தின் செயல்பாடு மற்றும் நிர்வாகத்தை இந்திய ரயில்வேயிடமிருந்து, சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் (CMRL) க்கு மாற்றுவதற்கு அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

MRTS இன் சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பை CMRL க்கு முழுமையாக மாற்றுவதில் ஏற்பட்டிருக்கும் தாமதத்திற்கான காரணங்கள் என்ன?

இந்த மாற்றத்தை சுமுகமாக செயல்படுத்துவதற்காக நிதி, செயல்பாடு மற்றும் சட்ட ரீதியான விவகாரங்களை அரசு பரிசீலித்து வருகிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

MRTS நெட்வொர்க்கை CMRL க்கு முழுமையாக மாற்றுவதற்கான எதிர்பார்க்கப்படும் காலக்கெடு என்ன? இந்த ஒருங்கிணைப்பின் மூலம் ரயில் பயணிகளுக்கு கிடைக்கும் நன்மைகள் என்ன?” என்ற கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுப்பியிருந்தார்.

பச்சான் அட்டைத் திட்டத்தின் கீழ் 3 ஆண்டுகளில்

தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட கைவினைஞர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

காஞ்சிபுரம் க.செல்வம் எம்.பி. கேள்விக்கு – ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சகம் பதில்!

புதுடெல்லி, ஜூலை 31 -

29.07.2025 அன்று நடைபெற்ற நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகதிற்க்கு காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம் எழுப்பிய கேள்விகள் வருமாறு:

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் (PEH CHAN CARD SCHEME) பெஉற்சான் அட்டை திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கைவினைஞர்களின் எண்ணிக்கை.

(ஆ) ஜவுளி அமைச்சகத்தின் பல்வேறு திட்டங்களின் கீழ் பெஉற்சான் அட்டைகளை வைத்திருக்கும் கைவினைஞர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் மற்றும் உரிமைகள் பற்றிய விவரங்கள்.

(இ) இந்தத் திட்டங்களின் கீழ் திறன் மேம்பாட்டுத் திட்டங் கள், வடிவமைப்பு பயிற்சி, சந்தைப்படுத்தல் ஆதரவு, கடன் வசதி மற்றும் சுகாதார ஆயுள் காப்பீடு ஆகியவற்றை அணுகுவதில் பெஉற்சான் (PEH CHAN) அட்டைதாரர்களுக்கு முன்னுரிமை கிடைக்குமா.

(ஈ) கடந்த ஐந்து ஆண்டுகளிலும் அரசாங்கத்தால் செயல்ப்படுத்தப்பட்ட தேசிய கைவினை மேம்பாட்டுத் திட்டம், விரிவான கைவினைப் பொருட்கள் தொகுப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பிற திட்டங்களால் பயனடைந்த கைவினைஞர்களின் எண்ணிக்கை.

(2) கைவினைஞர்களின் வாழ்வாதாரம் மற்றும் நலனை மேம்படுத்துவதில் மேற்கண்ட திட்டங்களின் செயல்திறன் குறித்து அரசாங்கம் ஏதேனும் தாக்க மதிப்பீடு அல்லது பயனாளி கருத்துக் கணக்கெடுப்பை நடத்தியுள்ளதா?

(ஊ) அப்படியானால், அத்தகைய மத்திப்பீடுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் தீர்வு நடவடிக்கைகள் யாவை?

இவ்வாறு க.செல்வம் கேள்விகள் கேட்டிருந்தார்.

இதற்கு ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சகம் சார்பில் அளித்த பதில்கள் வருமாறு-

(அ) பெஉற்சான் (PEH CHAN) அட்டை முயற்சியின் கீழ், தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட கைவினைஞர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

2022-2023 ஆண்டு கைவினைஞர்கள் பதிவு 5,356, 2023- 2024 ஆம் ஆண்டு 3,219, 20242025 ஆம் ஆண்டு 5,599, கடந்த மூன்று ஆண்டுகளில் 14,174 பேர், ஜூன் 2025 வரை 84,311 பேர் .

(ஆ) ஜவுளி அமைச்சகத்தின் கீழ் உள்ள மேம்பாட்டு ஆணையர் (கைவினைப் பொருட்கள்) அலுவலகம், நாடு முழுவதும் கைவினைத் துறையின் ஒட்டுமொத்த மேம்பாடு மற்றும் மேம்பாட்டிற்காக தேசிய கைவினைப் பொருட்டுகள் மேம்பாட்டுத் திட்டம் (NHDP) மற்றும் விரிவான கைவினைப் இரண்டு பொருட்கள் தொகுப்பு மேம்பாட்டுத் திட்டம் (CHCDS) என திட்டங்களை செயல்படுத்துகிறது. இந்த திட்டங்களின் கீழ், சந்தைப்படுத்தல் நிகழ்வுகள், திறன் மேம்பாடு, தொகுப்பு மேம்பாடு, உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்குதல், கைவினைஞர்களுக்கு நேரடி நன்மை. உள்கட்டமைப்பு மற்றும் தொழில் நுட்ப ஆதரவு மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆதரவு மூலம் கைவினைஞர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்காக தேவை அடிப்படையிலான நிதி உதவி வழங்கப்படுகிறது. இது நாடு முழுவதும் உள்ள பாரம்பரிய கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு பயனளிக்கிறது.

(இ) பெஉற்சான் (PEH CHAN) அட்டை வைத்திருப்பவர்கள் மட்டுமே மேம்பாட்டு ஆணையர் (கைவினைப் பொருட்கள்) அலுவலகத்தால் நடத்தப்படும் திட்டங்களின் கீழ் சலுகைகளைப் பெறத் தகுதியுடையவர்கள்.

(ஈ) கடந்த ஐந்து ஆண்டுகளில் NHDP & CHCDS திட்டம் மற்றும் ஜவுளி அமைச்சகத்தின் சமர்த் திட்டத்தின் கீழ் பயனடைந்த கைவினைஞர்கள் பின்வருமாறு:

2020-2021 ஆண்டு பயனடைந்த கைவினைஞர்கள் 95,284, 2021- 2022

2022- 2023 ஆம் ஆண்டு 1,48,358 பேர், 2023- 2024 ஆம் ஆண்டு 1,2, 164 பேர், 2024-2025 ம் ஆண்டு 1,02,601 பேர், 2025- 2026 (ஜூன் 2025 வரை)

மொத்தம் 79, 387 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

(உ) இந்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தால் அனைத்துதிட்டங்களுக்கும் ‘பயனாளிகளின் உணர்வுகள் மற்றும் முன்முயற்சிகள் குறித்த கணக்கெடுப்பு என்ற ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. NHDP & CHCDS ஆகியவை இந்த ஆய்வில் சேர்க்கப்பட்டடுள்ளன. இந்த ஆய்வு பயனாளிகள் மீதான திட்டங்களின் பன்முக தாக்கத்தை உள்ளடக்கியது.

(ஊ) ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகள், 70% க்கும் மேற்பட்ட பயனாளிகள் மேம்பட்ட வருமானம் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டைப் புகரளித்தனர். 75% க்கும் மேற்பட்ட பயனாளிகள் தங்கள் உற்பத்தித் தரங்களில் உறுதியான முன்னேற்றத்தைக் கூறினர். 60% க்கும் மேற்பட்டோர் உற்பத்தித் திறனில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் மேம்பட்ட உற்பத்தித் திறனைக் கண்டனர். புதிய சந்தைகளை அணுகும் போது 34% பேர் சவால்களை எதிர்கொண்டனர், 69% பயனாளிகள் இந்தத் திட்டம் அனைத்து தொடர்புடைய பங்குதாரர்களையும் உள்ளடக்கியது என்று நம்புகிறார்கள். மேலும் சுமார் 80% பயனாளிகள் இந்த திட்டம் நீண்ட காலத்திற்கு அவர்களின் வணிகங்களிலும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஒப்புக்கொண்டனர்.

மேற்கண்ட ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்புகளின் அடிப்படையில், கைவினைஞர்களின் சவால்களை எதிர்கொள்ள பல்வேறு அளவுருக்களின் அடிப்படையில் சிறந்த அணுகலை உறுதி செய்வதை உறுதி செய்வதற்காக, வருடாந்திர சந்தைப்படுத்தல் நாட்காட்டியில் புதிய இடங்களைச் சேர்ப்பதன் மூலம், புதிய சந்தைகளுக்கு கைவினைஞர்களின் அணுகலை அதிகரிக்க, DC (கைவினைப் பொருட்கள்) அலுவலகம் ஒரு செறிவூட்டல் திட்டத்தைத் தயாரித்தது.

இவ்வாறு ஒன்றிய ஜவுளித் துறை சார்பில் பதிலளிக்கப்பட்டது.

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் பெயர்
12-II of 2025-26	மே.பொ. / செ / தெற்கு - II	Supply of 11kV AB Switch

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tntenders.gov.in/nicgep/app, www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/4009/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
139	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I	Discharge chute SS for feeder of HP803 Bowl mills
140	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I	Lower Journal bearing housing of HP803 Bowl mills in Unit-I
141	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I	Shaft assembled with MS Impellers with hubs and keys
143	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I	10 80 Variable Load Hanger Assembly for condenser left and Right outlet pipes in Unit-I
149	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I	Constant load hanger Assembly for HP803 Bowl Mills of Unit - II
150	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I	CWP Discharge line SS 316 Spool piece for BFV side for 3A
151	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I	Spares for making readiness of stand by scrapper feeder for all the three units bottom ash hopper
152	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I	Roller Journal assembly in assembled condtion without grinding
154	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I	Eliminator Box with louvers for all 3 units in Air washer ventilation system
156	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I	Splitter assembly for flue gas duct for unit-II
157	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I	Spring seal assembly for guillotine gate at ID inlet
158	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I	Spares for Hydraulic boom luffing system valves and pumps for ECHS Stacker
160	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I	Plate Heat Exchanger Pressure Plate End plate for PHE 1A 1B 1C
161	மே.பொ / கொ&நி / வ.செ.அ.மி.நி - I	350 NB Seamless pipes of OD 355 6 mm and MS Coupling set suitable for 350NB Seamless pipe
152	மே.பொ / இ - I / வ.செ.அ.மி.நி - I	Unit - I Insulation for FGD B pass from Expansion joint to 15 mtr ESP outlet C D to ID inlet OH 25 26

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: www.tntenders.gov.in/nicgep/app,www.tnpdcl.org, www.mstcecommerce.com/eprochome/tneb, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/4010/ஒப்பந்தப்புள்ளி/2025

அமைச்சர் தா.மோ.அன்பரசன் – இ.கருணாநிதி எம்.எல்.ஏ. – ரபி அகமது ஆலோசனை வழங்குகின்றனர்!

செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. (BLA-2) - (BDA) நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், ஜூலை 31 -

செம்பாக்கம் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. பாக முகவர்கள் (BLA - 2), பாக தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் (BDA) நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (01.08.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில், அஸ்தினாபுரம், ராமசாமி தெரு, ஜே.எஸ்.வி.மஹாலில் பகுதி கழக அவைத் தலைவர் ஏ.வீரபத்திரன் தலைமையிலும், பகுதி நிர்வாகிகள் கே.பூபதி, எச். பாஸ்கரன், சி.சரஸ்வதி சந்திரசேகர், டி.கார்த்திக் ஆகியோர் முன்னிலையிலும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி, பல்லாவரம் சட்டமன்ற தொகுதிப் பார்வையாளர் ரபி அகமது ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கிட உள்ளார்கள்.

எனவே இக்கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி இளைஞர் அணி, மாணவர் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:பல்லாவரம் வருகை தரும் முதல்வர் வரவேற்பு சம்பந்தமாகவும், ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை சம்பந்தமாகவும், கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு செம்பாக்கம் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வே. தங்கபாண்டியன்
ஜூலை 31 (1997)



தென்பாண்டி மண்டலத்தில் கழகத்தை வளர்த்த முக்கிய தளகர்த்தர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்.

மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து 23 ஆண்டுகள் பணியாற்றியவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.

இருமுறை சட்டமன்ற உறுப்பினராகவும், இருமுறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், கலைஞர் அமைச்சரவையில் 1996ஆம் ஆண்டு கூட்டுறவு – வணிகவரித்துறை அமைச்சராகவும் பணியாற்றியவர்.

காரியாப்பட்டி ஒன்றியப் பெருந்தலைவர், மல்லாங்கிணறு பேரூராட்சித் தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

“மாவட்டச் செயலாளர் பணியில் வீரமிகு பாண்டியனாகவும், அமைச்சர் பொறுப்பில் பத்தரை மாற்றுத் தங்கமாகவும் திகழ்ந்தவர்” என தலைவர் கலைஞர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.